Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

**Vol. 69** அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது. சங்.19:6 ஜூன் 2023 No.6

## "என் தேவன் எனக்குச் செவிகொடுப்பார்"

### *"My God will hear me"*

Andrew Murray (1828 - 1917)

"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்.

...அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

...உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி அதைக் கேட்டவுடனே உனக்கு மறு உத்தரவு அருளுவார்" ஏசா.30:18,19. "நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்" சங்.4:3. "தேவனே நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்" சங்.17:6. "நானோவென்றால் கர்த்தரை நோக்கிக் கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன். என் தேவன் என்னைக் கேட்டருளுவார்" மீகா.7:7.

ஜெபத்தின் வல்லமை, அதைக் கேட்கும் தேவன் மேலுள்ள விசுவாசத்தை சார்ந்தது. இந்த விசுவாசம் ஜெபிப்பதற்கான தைரியத்தையும், தேவனோடு போராடி மேற்கொள்ள வலிமையையும் தருகிறது. தேவன் எனக்குச் செவிகொடுக்கிறார் என்ற நம்பிக்கை வந்ததும் நாம் ஜெபத்தினால் கவரப்பட்டு, தொடர்ந்து ஜெபிக்கிறோம். தேவன் கொடுக்கும் பதிலை உரிமையோடு கேட்க விசுவாசத்தால் அதைப் பெற்றுக் கொள்ளவும் பெலன் பெறுகிறோம். ஜெபக்குறைவுக்கான மிகப் பெரிய ஒரு காரணம் ஜீவனும் மகிழ்ச்சியும் நிறைந்த உறுதி நம்மில் குறைவுபடுகிறது தான். தேவ பிள்ளைகள் ஜீவனுள்ள தேவன் தங்கள் விண்ணப்பங்களுக்குச் செவி கொடுத்து அவர்களுக்குத் தேவையான ஆவியின் வரங்களைக் கொடுக்கிறவர் என்ற காட்சியினை உடையவர்களாயிருந்தால் அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு விசுவாசமுள்ள ஜெபம் என்ற ஒரே வல்லமைக்காகவும், பரலோக ஆசீர்வாதத்திற்காக காலமும் இடமும் ஒதுக்குவார்கள்.

தேவன் எனக்குச் செவி கொடுப்பார் என்று ஒருவர் விசுவாசத்துடன் கூறினால் அவர் ஜெபிக்க எந்தத் தடையும் வர முடியாது. அவனால் செய்ய முடியாதது பரத்தினால் செய்யப்படும். நாம் தேவனுக்கு முன்பாகப் பணிந்து காத்திருந்து அவர் ஜெபத்தைக் கேட்கிறவர் என்பதை வெளிப்படுத்த வாஞ்சிப்போம்.

**'என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்'**

### 1. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

இது ஒரு ஆசீர்வாதமான உறுதிப்பாடு! தேவ வசனம் எண்ணற்ற வாக்குத்தத்தங்களை உடையது. அது சத்தியம் என்பதை உறுதிப்படுத்தும் சாட்சிகள் ஏராளம். நமது வாழ்விலும் இதனை அனுபவித்திருக்கிறோம். பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தேவகுமாரன் கொடுத்திருக்கும் செய்தி, நாம் கேட்டால் பிதா நிச்சயமாக அருளுவார் என்பதாகும். அவரும் உலகத்தில் வாழ்ந்த போது ஜெபித்தார். அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. இப்போது அவர் பரலோகத்தில் தனது பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். தேவன் ஜெபத்தைக் கேட்பதில் அவர் பிரியப்படுகிறார். தமது ஜனம் தம்மை நோக்கி ஜெபிக்கவும், அவர் ஜெபத்தைக் கேட்கிறவர் என்று கற்றுக் கொள்ளவும், அவர் மறுபடியும் மறுபடியும் அவர்களைக் கட்டாயப்படுத்துகிறார்.

நாம் இந்த சத்தியத்தை விசுவாசிக்கவில்லை. அதாவது, அதை இருதயத்தில் ஏற்றுக் கொண்டு நமக்குச் சொந்தமாக்கி நம்மை முழுவதும் அவரே நடத்த நம்மை ஒப்புக்கொடுக்கவில்லை என்பதை வெட்கத்தோடு அறிக்கை செய்வோம். தேவன் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி ஜெபியுங்கள். அவருக்கு முன்பாக ஜெபிக்கவும் அவரை ஆராதிக்கவும் வரும் போது அமைதியாக அவர் உங்கள் அருகில் வந்து பதில் தரும்படி கிட்டிச் சேரும் உணர்வு ஏற்படும் வரை காத்திருங்கள். '**என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்**' என்று ஆரம்பியுங்கள்.

### 2. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

எல்லையற்ற மகத்துவமுடைய தேவனை எண்ணிப் பாருங்கள். விவரிக்க முடியாத அவருடைய மகிமை, எட்டிப் பிடிக்க முடியாத அவரது தூய்மை, இவற்றோடு கிருபையின் ஆசனத்தில் உட்கார்ந்து அவரது வாக்குத்தத்தங்களுக்காக ஜெபிக்க கிருபையாய் அழைத்து உற்சாகப்படுத்துகிறார். "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன்" எரே.33:3.

ஒன்றுமில்லாய்மையிலும், உதவியற்ற நிலையிலும் நீங்கள் ஏழைப் பாவியாகவும், பலவீனத்திலும், தகுதியின்மையிலும் ஒரு பரிசுத்தவானைப் போல அவரிடம் வரலாம். தேவன் நம்மைக் கிறிஸ்துவுடன் இணைத்திருப்பதால் அவருடைய நாமத்தில் உறுதியைப் பெறுகிறீர்கள். சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்து உங்களுக்காக உங்களோடு ஜெபிக்கிறார். அவரது பாதப்படியில் நீங்கள் அவரோடும் அவருக்குள்ளும் ஜெபிக்கிறீர்கள். அவரது தகுதியும், பிதாவின் செவி கொடுத்தலுக்கான பிரியமும் உங்கள் உறுதியின் அளவையும், நீங்கள் கேட்கும் அளவினையும் தெரிவிக்கின்றன. தேவனுடைய சொந்தக் குமாரனுடைய ஆவியாகிய தூய ஆவியானவர் உங்கள் இருதயங்களில் ஊற்றப்படும் போது நீங்கள் '**அப்பா பிதாவே**' என்று கதறுவீர்கள். உங்களில் அர்ப்பணிப்பின் ஆவி தோன்றி நீங்கள் எதற்காக எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அறிவீர்கள் ரோமர் 8:26,27

நீங்கள் முக்கியமற்றவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் இருந்தாலும் கிறிஸ்துவைப் போல ஏற்றுக்கொள்ளப்படுவதை எண்ணிப் பாருங்கள். உங்கள் அறிவீனம், பெலவீனம் ஆகியவற்றில் ஆவியானவராகிய தேவன் உங்களிலிருப்பதால் "அற்புதமான கிருபை, இது கிறிஸ்துவின் மூலம்! என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று ஆச்சரியப்படுவீர்கள்.

### 3. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

சில வேளைகளில் மிகவும் உத்தமமான இருதயத்தையும் கலங்கப்பண்ணும் கஷ்டங்கள் எழும்பலாம். தேவனுடைய சர்வ சக்தி, ஞானம் எல்லாவற்றையும் செய்யும் சித்தம் ஆகியவற்றைக் குறித்து கேள்வி எழும்பலாம். எல்லாவற்றையும் அறிகிறவரும், எது மிகவும் நல்லது என்று அறிகிறவருமானவரும், மிக நல்லதை மட்டுமே செய்கிறவருமான தேவனிடத்தில் சகலத்தையும் ஒப்புவித்து விடுங்கள். இங்கு விடாப்பிடியாக ஏறெடுக்கும் ஜெபமும், பதிலுக்காகக் காத்திருப்பதும் தேவைப்படும். தேவன் அளவிலடங்காதவரும், நாம் பெற்றுக் கொள்வதை விட அளிப்பதற்கு விருப்பமுள்ளவராயிருந்தால் ஏன் கெஞ்ச வேண்டும்? போராட வேண்டும்! கால தாமதமேன்! என்பவற்றைக் குறித்து வேத வசனம்

(3-ம் பக்கம் பார்க்க)

**அறிவிப்பு**

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்**

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)


Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh,
Christy Samuel, Christinal P.Mony

## 2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

**"அவர் (இயேசு) மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"** லூக்கா 22:44

எப்ரல் மாதம் உபவாச ஜெபம் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் என்ற ஊரில் ஏ.ஜி. சர்ச்சில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. **நிம்ஸ்** ஊழியத்தில் உதவி செய்யும் **சகோ. ஜெரோம்**, குளச்சல் பகுதியில் International Evangelical Association, என்ற ஜெபக் குழுவை நடத்தும் **சகோ. லால்** என்பவரை தொடர்பு கொண்டு இந்த உபவாச ஜெபத்தை ஏ.ஜி. சபையின் **போதகர் கிறிஸ்டோபர்** அவர்கள் ஒத்துழைப்போடு ஒழுங்கு செய்தார்கள்.

குளச்சல் நாகர்கோவில் அருகிலிருந்தபடியால் **போதகர் அற்புதராஜ் (நிம்ஸ் சபை, சுந்தரபாண்டியம், ஸ்ரீவில்லிபுத்துதூர், ராஜபாளையம்)** மற்றும் **ரெவ. துரைசிங்** (IEM, Zonal Secretary, Madurai) முன்தினம் இரவு நாகர்கோவில் வந்து நமது தேவனுடைய வீட்டின் மாடியில் தங்கினார்கள்.

மறுநாள் காலை சுமார் 8.30 மணிக்கு புறப்பட்டு 9.00 மணிக்கு குளச்சல் போய் சேர்ந்தோம். ஜெபத்தை ஒழுங்கு செய்த **சகோ. லால்** வந்து ஆயத்த வேலைகளை செய்தார்கள். போதகர் மற்றும் அவரது மனைவி தேனீர் கொடுத்து உபசரித்தார்கள். சரியாக 10.00 மணிக்கு சபை போதகர் ஜெபித்து உபவாச ஜெபம் ஆரம்பமானது. **போதகர் பிரகாஷ்** (J. S. Church, Parvathipuram, Nagercoil) பாடல் ஆராதனையை நடத்தினார்கள். 10.30 மணிக்கு நாங்கள் குழுவாக தரிசன பாடல் பாடிய பின்பு **சகோதரர் வெஸ்லி தேவதாசன்** அவர்கள் ஊழியர்களை அறிமுகம் செய்தார்கள். எங்கள் சொந்த மாவட்டமானபடியால் வருகையின் தூதன் ஊழியத்தைக் குறித்தும் அதன் ஆசிரியர் காலம் சென்ற **பாஸ்டர் S. தேவதாசன்** அவர்களை குறித்தும் சில காரியங்களை பகிர்ந்து 11.30 மணி வரை தரிசன செய்தியை சகோதரர் வெஸ்லி தேவதாசன் அவர்கள் கொடுத்தார்கள்.

11.30 முதல் 12.30 வரை **போதகர் அற்புதராஜ் (நிம்ஸ் சபை, சுந்தரபாண்டியம்)**, எழுப்புதலுக்கான ஜெபத்தை நடத்தினார்கள். 12.30 முதல் 01.30 மணி வரை சிறப்பு செய்தி சகோதரர் வெஸ்லி தேவதாசன் கொடுத்தார்கள். தொடர்ந்து 1.30 முதல் 02.30 மணி வரை நிம்ஸ் சார்பாக நடைபெறும் வடஇந்திய ஊழியங்களுக்காக ஜெபத்தை போதகர் அற்புதராஜ் நடத்தினார்கள். 2.30 முதல் 02.45 தேனீர் இடைவேளையில் விசேஷ பாடல்கள் எனது பிள்ளைகள் S.ஜோசிபா ஸ்டெபானி மற்றும் ஸ்டெபானோ S. பின்னி பாடினார்கள்.

2.45 முதல் 3.45 வரை **ரெவ. துரைசிங்** (IEM) அருட்பணி இயக்கம் குறித்தும், அது இந்தியா முழுவதும் ஆற்றும் பணி குறித்தும், வேதாகம மொழி பெயர்ப்பு குறித்தும், இந்தியாவில் வேதாகமம் இல்லாத மொழிகளில் வேதாகம மொழி பெயர்ப்புக்கு ஊழியர்களின் தேவை குறித்தும் அறை கூவல் விடுத்தார்கள். 3.45 முதல் 4.45 வரை நிறைவு செய்தி சகோதரர் வெஸ்லி தேவதாசன் கொடுத்தார்கள். 4.45 முதல் 5.00 வரை விசேஷ ஜெபம் சபைக்காக, போதகருக்காக, விசுவாசிகளுக்காக மற்றும் குளச்சல் பகுதிக்காக போதகர் பிரகாஷ் நடத்தினார்கள். நிறைவாக சபை போதகர் உபவாச ஜெபம் குறித்து சில வார்த்தைளை கூறி ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

அனேக விசுவாசிகள் கலந்து கொண்டு வாஞ்சையோடு ஜெபித்தார்கள். அருகிலுள்ள சில ஊழியர்களும் வந்திருந்தனர். ஒரு வயதான தாயார், பழைய வருகையின் தூதன் வாசகர், ஜெபம் முடிந்த பின்பு முன்னே வந்து முன்னாள் ஆசிரியர் பாஸ்டர் S. தேவதாசன் குறித்து சில காரியங்களை பகிர்ந்தது மகிழ்ச்சியாக இருந்தது. இன்னொரு அருமையான சகோதிரி, முன்னாள் ஆசிரியர் காலம் சென்ற பாஸ்டர் S. தேவதாசன் அவர்கள் தனது 99-ம் வயதில் தொடை எலும்பு முறிந்து குளச்சல் ஜேம்ஸ் மருத்துவ மனையில் அறுவை சிகிட்சை செய்து சிகிட்சை பெறும் போது அருகிலிருந்து கவனித்த சீனியர் ஸ்டாப் நர்ஸ் சகோதரி ராஜீனி அவர்கள் ஜெபம் முடிந்த பின்பு வந்து யாவரையும் விசாரித்தார்கள். அனேக வருடங்களுக்கு பின்பு அவர்களை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தததது.

சபையை ஜெபத்திற்கு திறந்து கொடுத்து, அனைத்து ஒழுங்குகளையும் செய்த சபை **போதகர் கிறிஸ்டோபர்** குடும்பம், எல்லா காரியங்களிலும் பின்நின்று உதவி செய்த **சகோ. லால், சகோ. ஜெரோம்,** விசுவாசிகள் மற்றும் உதவி செய்த யாவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். கர்த்தர் தாமே யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக.

மேலும் 7 மணி நேர உபவாச ஜெப ஊழியங்களை ஜெபத்தினாலும் உதாரத்துவமான தியாக காணிக்கைகளினாலும் தாங்கின யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. இவ்வருடம் மே மாதம் உபவாச ஜெபம் ஒழுங்காகவில்லை. ஜூன் மாதம் ராஜபாளையம் சிற்றி ஏ.ஜி. சபை, சத்திரப் பட்டி ரோடு, ராஜபாளையத்தில் ஒழுங்கு செய்யபட்டுள்ளது. இவ்வருடத்திற்கான மீதியான மாதங்களும் இடங்கள் ஒழங்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

**கிறிஸ்துவுக்குள்,**
**W. சாமுவேல் பின்னி**

**தண்ணீர் மேல் நடந்த பேதுரு இயேசுவை நோக்கிய போது, பாறை மேல் நடப்பது போல் நடந்தான். ஆனால் புயலினால் ஏற்பட்ட அலைகளை நோக்கிய போது அமிழத் தொடங்கினான்.**

## அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

**கடிதம், மணியாடர், கொரியர்** அனுப்ப வேண்டிய முகவரி:

| | |
|---|---|
| **வருகையின் தூதன்** | **VARUKAYIN THOOTHAN** |
| நியுபோர்ட் தெரு, | Newport Street, |
| நாகர்கோவில் – 629 001. | Nagercoil-629 001. |
| **Ph. :** 95432 21008 | **Ph. :** 95432 21008 |


**காசோலை** *(Cheque & Draft)*
**வெஸ்லி தேவதாசன்** (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

### வருகையின் தூதன் பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

### வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

### வருகையின் தூதன் முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

*(1-ம் பக்க தொடர்ச்சி)*

அனுபவம் போன்றவை கூறுவது என்ன? இவ்வித கேள்விகளால் திகைக்கும் போது 'என் தேவன் எனக்குச் செவி கொடுப் பார்' என்பதே பதில்.

தேவனைப் பற்றி நாம் அறிந்து கொள்வதில் மிக ஆசீர்வாதமான அவரது பண்பு, அவர் ஜெபத்தைக் கேட்கிறார் என்பதே. நாம் அவருடைய குமாரனில் ஜெபிப்பதாலும், தூய ஆவியானவர் நம்மிலிருந்து ஜெபிப்பதாலும் தேவன் ஜெபத்தைக் கேட்பது சத்தியம். அனைத்து ஜெபங்களுக்கும் பதில் பெறப்படாவிட்டாலும் தூய ஆவியான வர், அதை விசுவாசிக்கவும், அதில் மகிழ்ச்சியாயிருக்கவும் உதவி செய்வார். நாம் நமது கேள்விகளை தேவனிடத்தில் ஒப்புவித்து அவரது உத்தமத்தை நம்பி அவரது கட்டளைகளுக்குத் தாழ்மை யுடன் கீழ்ப்படிந்து இடைவிடாமல் ஜெபிப்பது இன்றியமையாதது.

### 4. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு! பல வேளைகளில் நாம் இருள், பலவீனம், தோல்வி என்று உதவியற்றவர்களைப் போல பராது சொல்லுகிறோம். தேவன் நமது வேண்டுதல்களைக் கேட்டு, நமது தேவைகளை சந்தித்து, அவரது ஒளி மற்றும் சமாதானத்தை தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். இத்தகைய ஒரு தேவனைக் கொண்டவர்களா யிருந்தும் இவற்றைப் பெற்றுக் கொள்ள நாம் ஏன் பொறுப்பை எடுத்துக் கொள்வ தில்லை! பாவமும், வெட்கமும் நம்மிலிருக் கிறதே. தேவ கிருபை, ஜெபித்து பெற்றுக் கொள்ள நமக்கு உதவி செய்வாராக.

ஜெபத்தை கேட்கிற ஆண்டவர் நம்மை நமது உடன் விசுவாசிகளுக்காக ஜெபிக்கச் செய்கிறார். கிறிஸ்து போராடி ஜெபிக்கும் உரிமையை மனிதனுக்கு அளிக்க தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். கிறிஸ்துவுடன் நம்மை இணைத்து இந்த உரிமையாகிய மன்றாட்டைப் பகிர்ந்து கொள்வோ மானால் அவர்களுக்காகவும் பரலோக வல்லமையைப் பெற்றுத்தர முடியும். ஜெபத்திற்குப் பதிலாக ஆவியானவர் ஊற்றப்படவும், ஆத்துமாக்கள் மனந் திரும்பவும், விசுவாசிகள் ஸ்திரப்படவும் ஏதுவாகும். ஜெபத்தின் மூலம் அந்தகார அரசு மேற்கொள்ளப்பட்டு ஆத்துமாக் கள் மீட்கப்பட்டு விடுதலையும் பெற முடியும். தேவ மகிமையும் வெளிப்படும். ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தைக் கொண்டு வல்லமையாக பொதுக் கூடுகைகளிலும் தனிப்பட்ட மக்களோடு பேசும் போதும் மிகவும் முரட்டு இருதயமுள்ளவர்களும் இயேசு வின் பாதத்தில் கொண்டு வரப்பட ஏதுவாயிருக்கிறது.

சபை தன்னை மன்றாட்டில் ஈடுபடுத்துவது மிக முக்கியமானது. எல்லா ஊழியக்காரர் மேலும், மிஷனெறிகள் மேலும், சுவிசேஷப் பணியாளர்கள் மேலும் ஆத்தும ஆதாயப் பணி ஒரு பொறுப்பாக அளிக்கப் பட்டுள்ளது. மன்றாடுவதன் மூலம் 'தேவன் எனக்குச் செவி கொடுப்பார்' என்பதை நிரூபிக்க முடியும். நமக்கு அளிக்கப்பட்ட தாலந்துகளைப் புதைக் காமலும், இழக்காமலும் இருக்க ஒவ்வொரு விசுவாசியும் அழைக்கப் படுகிறான். ஜெபத்தின் மூலமாகவும், வேண்டுதலின் மூலமாகவும் எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும், எல்லா மனிதருக்காகவும் ஜெபிக்கலாம். இதன் அற்புத வல்லமை ஆழமாக நமக்குள் செல்லும் போது நமது அர்ப்பணம் முழுமனதோடு மன்றாடுதலில் ஈடுபடச் செய்யும்.

### 5. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

எனது தோல்விகளை நான் கண்டு கொள்ள முடிகிறது. மன்றாட்டு வாழ்வில் ஆழமாக வேரூன்றும் போது உறுதியில் நான் முழு நம்பிக்கை வைக்க வில்லை என உணருகிறேன். அதைக் கண்டு கொள்ள முடிந்ததால் தேவனைத் துதிக்கிறேன்.

கிறிஸ்துவோடு ஒன்றித்து அவருடைய தூய ஆவியால் நாம் நடத்தப்படும் போது 'நான் பிறருக்காக ஜெபிப்பேன், என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்'. நமக்காகக் கவலைப் படுகிறவரும் நமது ஜெபத்தைக் கேட்ப வருமான நமது தேவனிடம் உலக ஆத்மீகக் கவலைகளைக் கொடுத்து விட்டு, அவரிடமிருந்து சமாதானத்தைப் பெறலாம். ஜெபத்திற்குப் பதில் தாமத மானாலும், விடப்பிடியாக ஜெபிக்க வேண்டியதாயிருந்தாலும் நிலையான சத்தியம் 'என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்' என்பதே.

ஜெபத்தைக் கேட்கிற தேவனுக்கு வாழ்வில் முதலிடம் கொடுப்போம். ஜெபத்தின் அவசரத் தேவையை உணர்ந்த நாம் ஜெபிப்பதை விட்டு விடக்கூடாது. அது அவசரமானது. தேவனுக்கு முதலிடம் கொடுக்கப்படும் போது, அவர் தமது ஆவியைத் தமது மக்கள் மீது ஊற்றுகிறார். சபை முழுவதி லுமுள்ள மக்கள் இந்த சத்தியத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

### 6. என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்:-

இது சிறந்த தெய்வீகப் போதனை. இதை ஜீவனுள்ள விசுவாசத் தோடும், முழு பயன்பாட்டுடனும் மன்றாட பயன்படுத்துவோம். இந்த நாட்களில் நமது சபைகளுக்கு தூய ஆவியானவரின் நிறைவு இன்றியமை யாதது. எனவே ஆவியானவரின் பொழிவுக்காக அதிக விசுவாசத்தோடும் விடாப்பிடியாகவும் ஜெபிக்க வேண்டும்.

ஆவியானவர் நம்மில் சுயாதீன மாக செயல்பட நாம் அறிக்கை பண்ண வேண்டியதும், விட்டுவிட வேண்டிய து மான அனேக காரியங்களுண்டு. நாம் தேவனையே நோக்கிப் பார்ப்பதும், அவரை சார்ந்து வாழுவதும், பலத்த சத்தத்தோடும், ஊக்கத்தோடு அவரை நோக்கி மன்றாடுவதும் நம்மில் குறைவு படுகிறது. ஆனால் இவை மிக முக்கிய மானவை. தேவன் தாமே தம்மை ஜெபத்தைக் கேட்கிறவராக நமக்கு வெளிப்படுத்தி நமது முழுமனதோடும் **'என் தேவன் எனக்குச் செவி கொடுப்பார்'** என்ற அறிக்கையினை நாம் வெளியிடக் கிருபை செய்வாராக.

# வாழ்விற்கும் ஊழியத்திற்கும் ஆறுதலும் பெலனுமாயிருப்பவர் நமது ஆண்டவர்

## *The Lord's comfort and strength for life and ministry*

Rich Carmicheal

அநேகருக்கு நாம் வாழும் இக்காலம் மிகுந்த கடினமானதாயிருக் கிறது. கிறிஸ்து மறுபடியும் வரப்போகிற காலகட்டமாய் இருப்பதால் இது ஆச்சரியமல்ல. பிசாசுக்கு தனது காலம் முடிவடையப் போகிறது என்பது நன்கு தெரியும். எனவே மனிதருடைய இருதயங்களிலும், உள்ளங்களிலும், ஆத்துமாக்களிலும் ஆவிக்குரிய போராட்டம் அதிகரிக்கிறது. "ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்க ளோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்ட முண்டு" எபேசி.6:12.

ஆவிக்குரிய மற்றும் சன்மார்க்க நெறிகள் வேகமாகச் சீரழிந்து விட்டன. முன்பு உரைக்கப்பட்ட கொடிய நாட்கள் வந்து விட்டன. "மேலும் கடைசி நாட் களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக" 2 தீமோ.3:1. தங்களுடைய சொந்த பாவத்தாலோ, பிறருடைய பாவத்தாலோ, எப்படியும் பாவத்தின் பெருக்கத்தால் மக்கள் அதன் விளைவு களை அனுபவிக்கிறார்கள். ஏறக்குறைய அனைத்து மக்களுமே பாடுகளை அநுபவிக்கிறார்கள். சிலர் நஷ்டங்கள், கொள்ளை நோய் போன்றவற்றால் பாதிப்பு அடைந்துள்ளனர். நெருப்பு, ஜலப்பிரளயம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப் பட்டவர்களுமுண்டு. வேதனைகளும், துக்கங்களும் வாழ்க்கையின் ஒரு பகுதியாக காணப்படுகின்றன. பொரு ளாதார நெருக்கடி, உறவுகளில் முறிவு, உடல் நலக்குறைவு, அன்பானவர்களின் மரணம் போன்றவை இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டன.

எந்தவிதமான பாடுகள் வழியாக நீங்கள் கடந்து சென்று கொண்டிருந் தாலும் இந்த இதழின் செய்திகள் உங்களுக்கு ஆறுதலையும் உற்சாகத் தையும் தருமென்று நம்புகிறோம். ஆண்டவர் நம்மேல் கரிசனையுள்ளவர். அவர் நம்மை எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறார். இந்த நெருக்கடி நாட்களில் இச்செய்தி மூலம் அவர் உங்களைத் தம்மிடம் நெருங்கிச் சேரவும், அவருக்காகப் பணியாற்றவும்

*(4-ம் பக்கம் பார்க்க)*

(3-ம் பக்க தொடர்ச்சி)

வழி நடத்தும்படி உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## புதுப்பிக்கப்பட்ட ஊழியம்

இந்தக் கடைசி நாட்களில் உங்கள் வாழ்வையும், தேவ பணியையும் புதுப்பித்து பலப்படுத்தி நடத்துவது தேவனுடைய விருப்பம் என நம்புகிறோம். இந்நாட்களில் தேவ ஜனம் தேவனுடைய வாழ்வையும், அவரது அன்பையும் பிறரோடு பகிர்ந்து கொள்வது இன்றியமையாதது. டேவிட் லின்ட்சேய் "இதற்கு முன் ஒரு போதும் வயல் நிலம் இவ்வளவாக விளைந்து முற்றியதில்லை. தேவை எங்கும் நிறைந்துள்ளது. எனவே இது கிறிஸ்தவர்களாகிய நாம் பிறருக்கு ஒளியாக விளங்க கொடுக்கப்பட்ட தருணம்" என்கிறார்.

அதற்கு நமது வாழ்வு நமது ஆண்டவரைப் போல அன்பு நிறைந்ததும் ஜீவன் பெற்றதுமாயிருக்க வேண்டும். நாம் எவ்வளவு நன்றாக வாழுகிறோம் என்று உண்மையாகக் கூறினால் நமது வாழ்வுக்கும் சேவைக்கும் போதுமான ஆதாரம் நம்மிடமில்லை. ஆண்டவரது பிரசன்னமும், வல்லமையும் நிச்சயம் நமக்கு வேண்டும். அவரது ஜீவன், அன்பு, சந்தோஷம், சமாதானம், பெலன் ஆகியவற்றால் நாம் நிரப்பப்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் படிக்கும் இப்பகுதி உங்களை ஆண்டவரிடம் இன்னும் அதிகமாகக் கிட்டிச் சேரவும் உங்களை அவரது ஆவியால் நிரம்பி வழிந்தோடச் செய்யவும் பயனுள்ளதாயிருக்கட்டும்.

"நாம் கர்த்தருக்கு காத்திருக்கும் போது, அவர் தமது பெலத்தால் நம்மை இடைகட்டி புதுப்பிக்கிறார். எனவே நமது அனுதின வாழ்வு ஆசீர்வாதம் நிறைந்ததாகவும், ஆவியின் வல்லமை நிறைந்ததாகவுமிருக்கும்" என்று ஜான் ரைட் போலெட்டே குறிப்பிட்டுள்ளார். ஆபகூக் 3:19-லிருந்து அலெக்ஸாண்டர் மாக்லேரன் என்பவர், "தேவனோடுள்ள உறவால் அவரே நமது பெலனாவதோடு, நமது கால்களையும் மான்களின் கால்களைப் போலாக்குகிறார்" எனக் குறிப்பிடுகிறார். அதோடு நமக்கு புத்துணர்ச்சி, மகிழ்ச்சி ஆகியவையும் வாழ்க்கைக்காகவும் ஊழியத்திற்காகவும் அருளப்படுவதாக அவர் கூறுகிறார்.

F.B. மேயர் "இக்காலத்தின் மிகப் பெரிய கேள்வி, நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுடன் போதுமான அளவு உறவு வைத்திருக்கிறோமா என்பதை உறுதி செய்வது தான்" என்கிறார். கிறிஸ்துவன்றி நம்மால் எதுவுமே செய்ய இயலாது ஆனால் நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருந்தால் பிதா மகிமைப்படும்படி அதிகக் கனிகளைக் கொடுக்க முடியும் (யோவா.15:5).

**ஜெபத்தைக் கேட்கிற தேவனுக்கு வாழ்வில் முதலிடம் கொடுப்போம். ஜெபத்தின் அவசரத் தேவையை உணர்ந்த நாம் ஜெபிப்பதை விட்டு விடக்கூடாது.**

## கிறிஸ்துவின் ஜீவனும் வல்லமையும்

கிறிஸ்துவின் நிறைவினால் எப்படி வாழ்ந்து ஊழியம் செய்ய வேண்டும் என்பதைப் பவுல் அறிந்திருந் தார். ஜீவனைக் குறித்து, 'நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து' கொலோ.3:4 என்றும் 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' பிலிப்.1:21 என்றும் அவர் கூறுகிறார். ஊழியத்தைக் குறித்து, "அதற்காக நான் எனக்குள் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" கொலோ.1:29 என எழுதுகிறார். கிறிஸ்து யார் என்பதையும் அவர் எவற்றையெல்லாம் செய்ய வல்லவர் மற்றும் தமது ஜனத்தின் மூலம் எவற்றைச் செய்யக் கூடியவர் என்பதையும் அறிந்தபடியால், "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய என்னால் கூடும்" பிலி.4:13 என்று தைரியமாகக் கூறுகிறார்.

அவரது அனுபவத்தை சகல விசுவாசிகளும் பெற்றுக் கொள்வது ஆண்டவரது விருப்பம் என்று அறிந்த அவர், அதற்காக அவர் ஜெபிக்கவும் செய்தார்.

"நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலை பெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிறையப் படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்" எபே.3:16,19.

"சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவரது வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" கொலோ.1:10,11.

ஜெபத்தோடு காத்திருப்போம். அவரைக் கிட்டிச் சேருவோம். அவர் நம்மிலும் நம் மூலமாகவும் பலத்த கிரியைகளைச் செய்து அவர் நாமத்தை மகிமைப்படுத்துவாராக.

# பதிலளிக்கப்பட்ட ஜெபம்

## *Answered Prayer*

Rosalind Goforth (1864-1942) Missionary to China

**ஜெபம்** என்பது ஒரு பெருமூச்சின் பாரம்
கண்ணீரின் தோல்வி,
மேல் நோக்கிப் பார்க்கும் கண்
தேவனைத் தவிர யாரும் அருகில் இல்லாத போது

- Montgomery

தேவனுடைய திட்டமும் நோக்கமும் அவரை நாம் கிட்டிச் சேர வழியைத் தருவதாகும். மனித சட்டங்களால் ஜெபம் கடினமாக்கப்பட்டுள்ளது. நம்முடைய வாழ்வில் நாம் எளிதாக ஜெபிக்க, தேவனால் திட்டமிடப்பட்ட, மிகவும் தேவையான ஜெபத்தின் அற்புதங்கள், வல்லமை, எளிமை ஆகியவற்றைச் சிறிது சிந்திப்போம். தேவனுடைய கம்பியில்லாத தந்தியை பயன்படுத்துவோம். கீழே குறிப்பிடப்படுவது தேவனுடைய ஜெபத்தைக் குறித்த எளிமையான திட்டம்.

கோஃபோர்த் அவர்களும் நானும் ஸ்காட்லாந்தில் சிறிய ஓய்வு எடுத்த போது எங்களை சந்தித்த ஒருவர் கூறிய சம்பவம் இது: அவர்களுக்கு அருகாமையில் ஒரு ஏழைப் பெண் பெரிய குடும்பத்துடன் வாழ்ந்தாள். அவளது கணவன் ஒரு கூலித் தொழிலாளி. அவர்கள் இரு அறைகள் மட்டுமே கொண்ட குடிசையில் வாழ்ந்தனர். அவள் குடும்பத்தை நடத்த துணிகள் துவைத்துப் பிழைக்க ஆரம்பித்தாள். அவள் துணிகளைத் துவைக்கும் போதும், இஸ்திரி செய்யும் போதும் பிள்ளைகளும் அவள் வளர்த்த கோழிகளும் அவளைச் சுற்றி நிற்கும். அவளுடைய ஆவிக்குரிய வாழ்வு ஆழமானதாகவும் உண்மையானதாகவுமிருந்ததால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அவளைக் குறித்துக் கேள்விப்பட்டனர். சபை ஊழியர் கூட தன் குதிரையை அவளது வீட்டினருகில் நிறுத்திவிட்டு அவள் வேலை செய்யச் செய்ய அவளுடைய நல்ல வார்த்தைகளைக் கேட்க சற்று நேரம் உட்காருவதுண்டு.

ஒரு நாள் அவர் அவளிடம், "ஆண்டவரை நெருங்கி வாழும் நீங்கள் அமைதியாக ஜெபிக்க தனியாய் நேரம் கிடைப்பதில்லையே?" என்று கேட்டார்.

அந்தப் பெண் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்து விட்டு, இஸ்திரிப் பெட்டியைக் கீழே வைத்து விட்டு உட்கார்ந்தாள். "ஊழியர் அவர்களே, நீங்கள் தவறாகப் புரிந்திருக்கிறீர்கள். நான் ஜெபிக்க நினைத்ததும், வேலையைப் போட்டு விட்டு, எனது நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, என் மேலங்கியை தலை மேல் போட்டுக் கொண்டு ஒரு நிமிடத்தில் என் ஆண்டவரோடு கூடாரத்துக்குள் தனியாக பிரவேசித்து விடுவேன்" என்றாள்.

அவளது நிரம்பி வழியும் ஆவிக்குரிய வல்லமை அழகும் ஆச்சரியமுமானது. அவள் ஒரு ஏழை கல்வியறிவற்ற ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கடின உழைப்பாளி. இதைப் போன்ற பிரான்சு தேசத்து பக்தை Madame Guyon இப்படி எழுதினார்கள்:

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

**எனக்கு எந்த இடமும் காலமுமில்லை,
எனது தேசம் அனைத்து கால
நிலைகளிலுமுள்ளது,
நான் அமைதியாகவும் கவலையற்றும்
எந்த இடத்திலும் இருக்க முடியும்
ஏனெனில் தேவன் எங்கும் இருக்கிறார்.**

மறுபடியும் மறுபடியும் மக்கள் என்னிடம் கேட்கும் கேள்வி "தேவன் தொடர்ந்து பதிலளிக்கிறாரா?" என்பது தான். நான் எழுதிய சாட்சிகளைக் குறித்த புத்தகத்தில் தேவன் எவ்வாறு கண்ணீர் விட்டு ஜெபித்த ஒரு தாயின் தேவையில் ஜெபத்தைக் கேட்டு பதிலளித்ததை எழுதியிருந்தேன். "நான் எப்படி தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக் கிறார் என்று அறிய முடியும்?" என்பது தான் புத்தகத்தின் பெயர். கொடுக்கப் படும் சம்பவங்களைப் படியுங்கள்.

## தேவையின் போது பொருளாதார உதவி

ஒரு குளிர் காலத்தில் நான் கனடாவில் டொறான்டோவில் பிள்ளை களுடனிருந்தேன். எனது கணவர் சீனா விலிருந்தார். அப்போது செலவுக்குச் சரியான பணம் இல்லாதிருந்தது. டிசம்பர் மாதம் மத்தியில் எனது ஒரு மகன் என்னிடம் வந்து, "அம்மா எனது இந்த நல்ல ஆடையைப் பாருங்கள். மிகச் சிறியதாக இருக்கிறது. நான் கலா சாலையில் ஒரு உயர் பதவியிலிருக் கிறேன், என்னோடுள்ளவர்கள் முக்கிய மானவர்கள். எனது கலாசாலையில் நான் தான் மிகவும் மோசமாக உடைய ணிகிறேன்" என்றான்.

அவனைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. "மகனே, இது தேவையானது என்பதை நான் அறிவேன். கர்த்தர் கொடுத்த வாக்கை நம்புவோம். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில் நிறைவாக்குவார் பிலி.4:19. என்னிடம் பணமில்லை, ஆனால் நாம் அவரை நம்பினால் ஒரு ஆடை வாங்க அவர் பணம் அனுப்புவார்" என்றேன்.

அவனும் உங்கள் விசுவாசத்தின் படி ஆகக்கடவது என்று கூறி வெளி யேறினான்.

அன்றே பணம் இல்லாமல் கடைக்குச் சென்றேன். எனக்குப் பிடித்த அழகிய நீலநிற ஆடையைக் கண்டேன். ஆனால் அதன் விலை அதிகமாயிருந்தது, என் உள்ளத்தில் 'தம்முடைய ஐசுவரியத் தின்படி' என்ற வார்த்தைகள் எழும்பிக் கொண்டேயிருந்தன. எனவே என் இருதயத்தில் 'தேவன் இதையும் செய்யக் கூடியவர்' என்று சொல்லிக் கொண் டேன். நான் அதனை வாங்காமலே வீடு வந்தேன். ஆனாலும் அது எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது.

**சந்தேகங்களை நாம் நோக்கும் தோறும் அவைப் பெரிதாகி நமது விசுவாசம், பெலன், மகிழ்ச்சி யாவற்றையும் விழுங்கி விடலாம்.**

அடுத்த நாள் அமெரிக்கா விலுள்ள விஸ்கான்சின் நகரிலுள்ள ஒரு பெண்ணிடமிருந்து 50 டாலருக்கான ஒரு காசோலை வந்தது. அவள் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு எழுப்புதல் கூடுகையில் என்னை சந்தித்தவள். என்னுடைய மகனுடைய பெயரைக் குறிப்பிட்டே காசோலை அனுப்பப் பட்டிருந்தது. நான் விரும்பிய அதே ஆடையை வாங்க அது சரியாயிருந்தது. ஆண்டவரைத் துதித்து அந்த ஆடை யினை மகனுக்கு வாங்கிக் கொடுத்தேன்.

சில மாதங்களுக்குப் பின்பு டொறான்டோ பொது மருத்துவமனை யிலிருந்தேன். வீட்டிலிருந்த என் பிள்ளைகள் வந்த கடிதங்களைக் கொண்டு வருவார்கள். நான் மருத்துவ மனையை விட்டு வெளியே வருவதற்கு முன்னால் ஒரு மாலை வேளையில் எனது மகள் மிகுந்த கலக்கத்துடன் என்னிடம் வந்து, "மருத்துவமனைக்குக் கொடுக்க வேண்டிய பில் வந்து விட்டது அது அதிகமாயிருக்கிறது" என்றாள். நான் என் வங்கி கணக்கைப் பார்த்த போது அதில் பணம் மிகக் குறைவாகவே இருந்தது. சில நிமிட நேரங்கள் செய்வதறியாது நின்றேன். எல்லாவற்றையும் மறந்து விட்டு என்னை ஆண்டவருடைய கரங்களில் ஒப்புவித்தேன்.

அடுத்த நாள் காலை எனது காலை உணவுத் தட்டில் ஒரு கடிதம் இருந்தது. தாதி என்னிடம், "இந்தக் கடிதம் நேற்று இரவு எங்களிடம் வந்தது. நீங்கள் தூங்கி விட்டபடியால் காலை வரை வைத்திருந்தோம்" என்றாள். அந்தக் கடிதம் எனது கணவரின் நெருங்கிய நண்பரிடமிருந்து வந்திருந் தது. அதில் 100 டாலருக்கான காசோலை இருந்தது. "தயவாக இதை ஏற்றுக் கொள்ளுங்கள். இது ஒரு தனிப்பட்ட வெகுமதி. உங்கள் கணவர் விரைவில் திரும்பிவர இருப்பதால் அதற்காக அனுப்பியுள்ளேன்" என்று எழுதப்பட்ட கடிதமும் இருந்தது. ஆண்டவருடைய பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்தேன். "நீங்கள் தேவனுடைய திறந்த வாய்க் கால், இந்த வெகுமதி எனது பரம பிதா உங்கள் மூலம் இதை வெகுமதியாக அனுப்பியிருக்கிறார்" என்று பதில் எழுதினேன்.

## அவரது வழிகள் நமது வழிகளைக் காட்டிலும் உயர்ந்தவை

நாங்கள் சீனாவில் ஹோனன் என்ற மிஷன் நிலையத்தில் தற்காலிக மாதத் தங்கியிருந்தோம். பெண்களுக் கான ஒரு கூடுகை நடத்த Dr. Fan என்ற முக்கிய மூப்பரின் வீட்டில் தங்கி யிருந்தேன்.

வகுப்பு முடிவடைந்த போது அவரது மனைவி ஆஸ்பத்திரியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஒரு சுகவீமான சிறுவனைப் பார்க்கும்படி அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொரு மூச்சு விடும் போதும் அவனது சரீரம் துடித்தது. வாயிலிருந்து நுரை வெளியே வர முகம் வெளிறியிருந்தது. அவன் சாவுக்கு அருகிலிருப்பதாகத் தோன்றியது. நான் ஜெபித்த போது மற்றவர்கள் என்னைச் சுற்றி நின்றார்கள். இவனுக்கு ஒரு அதிசயம் நடக்கும் என்ற நம்பிக்கை யில்லாமல் ஒரு மாய்மால ஜெபம் செய்தேன்.

நான் திரும்பிய போது எனது காதுகளில் "சபையின் மூப்பர்களை அழைத்து அவர்கள் ஜெபிக்கட்டும்" என்ற வசனம் எனது காதுகளில் இடைவிடாமல் கேட்டது. வீடு செல்லும் வரை அது தொனித்துக் கொண்டே இருந்தது. எனக்கு விசுவாசமில்லா விட்டாலும் அந்தக் குரலுக்குக் கீழ்ப்படிந்தேன்.

Dr. Fan-னிடம் அதைக் கூறிய போது அவர் என்னுடன் வர முதலில் மறுத்தார். நான் கட்டாயப்படுத்தின படியால் வந்தார்.

அந்தப் பையன் கொண்டு வரப்பட்டான். மூப்பர்களும் நண்பர் களும் அவனைச் சுற்றி நின்று ஜெபித் தோம். நான் அடுத்த நாள் ஊர் திரும்பி னேன்.

ஒரு வருடம் கழித்து நான் Mrs.Fan-ஐ சந்தித்தேன். "அந்தப் பையன் மரித்து விட்டானோ" எனக் கேட்டேன். அவன் சுகமடைந்து தந்தைக்கு உதவியா யிருப்பதாகப் பதில் வந்தது.

இரண்டு ஆண்டுகள் கடந்தன. அந்தப் பையனது ஊருக்கு ஒரு பெண்கள் கூடுகைக்காகச் சென்றேன். ஒரு நாள் உணவு அருந்திக் கொண்டிருக் கும் போது ஒரு உயரமான அழகிய வாலிபன் கதவைத் தட்டி உள்ளே நுழைந்தான். முந்திய நாள் கூடுகையில் எடுத்த படங்களை எனக்கருகிலிருந்த ஒரு பெண்ணிடம் கொடுத்து விட்டு என்னைப் பார்த்து, "உங்களுக்கு என்னைத் தெரியாது Mrs. Goforth" என்றான்.

"நான் இதற்கு முன்பு உன்னைப் பார்த்ததில்லை என்றேன்". அவன் முகமலர்ச்சியுடன் முன்னால் வந்து வணங்கி, "நான் தான் 3 ஆண்டுகளுக்கு முன் சுகவீனமாயிருந்த போது நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். நான் உங்களை ஒரு போதும் மறக்க முடியாது" என்றான்.

தேவனுடைய பெரிதான அன்பும் பொறுமையும் விசுவாசமற்ற என்னைக் கொண்டு அற்புதம் செய்ததை எண்ணி அவரைத் துதித்தேன்.

**"பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது"**

ஏசா.55:9.

**நமது பாதையில் வரும் தடைகளை நோக்க வேண்டாம். அவற்றைக் குறித்து நாம் சிந்திக்கத் தொடங்கினால் அவை நம்மைத் திகைக்கவும், குழப்பமடையவும் செய்யும். ஏனெனில் அவை ஏன் அனுமதிக்கப்பட்டன, எப்படி அவற்றை மேற்கொள்வது என்ப வற்றை நாம் அறிந்து கொள்ளக் கூடாத வர்கள்.**

# இழந்து போன அன்பானவர்களுக்கான வேத அடிப்படை ஜெபங்கள்

**Biblical prayers for the lost loved ones**

Kim Butts

ஆண்டவராகிய இயேசுவின் உறவை விட்டு வெளியேயிருக்கும் அன்பானவர்களுக்காக சோர்ந்து போகாமல் எப்படி ஜெபிப்பது என்பது சில வேளை அறிந்து கொள்ள கடினமாயிருக்கிறது. அவர்களுக்கு நற்செய்தியினை அறிவித்தால் மட்டும் போதாது. அந்தகார சக்திகள் மக்கள் சுவிசேஷத்தைக் கேட்காமலும் அதின் படி நடக்காமலுமிருக்க அதிகமாக கிரியை செய்கின்றன. மக்கள் இரட்சிக்கப் படுவது ஒரு ஆவிக்குரிய போராட்டம். ஆனால் தேவன் நமக்கு ஆவிக்குரிய போராயுதங்களைத் தந்திருக்கிறார். அவற்றை பயன்படுத்தி மக்கள் தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க வழி உண்டாக்க முடியும்.

**1. அவர்களுடைய இரட்சிப்பு சாத்தியமானது என்று விசுவாசிக்க வேண்டும்:**

“ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார். அவர்கள் சீஷர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து மனுஷரால் இது கூடாதது தான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்”.*(மாற்கு10:25-27).*

**ஜெபம்:** ஆண்டவரே, ........................ உடைய இரட்சிப்பு கூடுமானது என்று விசுவாசிக்கிறேன்.

**2. அனுதினமும் அவர்களுக்காக மன்றாடுங்கள் - விட்டுவிடாதேயுங்கள்:**

“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தி என்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். ....... நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமானது”. *(1தீமோ. 2:1-4).*

**ஜெபம்:** ஆண்டவரே, நான் .................... ஐ உமது சிங்காசனத்துக்கு முன்பாகக் கொண்டு வருகிறேன். ................ ஐ தினமும் நான் ஜெபத்தில் நினைப்பூட்ட உதவி செய்யும்.

**3. தேவனிடம் அவர்களை இழுத்துக் கொள்ளும் படி கேளுங்கள்:**

“என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்” *(யோவா. 6:44).*

**ஜெபம்:** பிதாவே, ...................ஐ உம்மிடம் இழுத்துக் கொள்ளும். அப்போது ................ கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கவும் விசுவாசிக்கவும் கூடும்.

**4. பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அவிசுவாசிகள் உணர்த்தப்பட தூய ஆவியானவர் கிரியை செய்ய ஜெபியுங்கள்:**

“அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்”. *(யோவா. 16:8).*

**ஜெபம்:** ஆண்டவரே, தயவாக ............க்கு பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்தி, நீதி இயேசுகிறிஸ்துவால் மட்டுமே கிடைக்கும் என்று கண்டு கொள்ளச் செய்யும்.

**5. அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்கி வைத்திருக்கும் திரை அகற்றப்பட தேவனிடம் கேளுங்கள்:**

“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசியாமலிருக்கும்படிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்” *2 கொரி.4:4.*

**ஜெபம்:** பிதாவே, தயவாக ...............டைய மனதைக் குருடாக்கியிருக்கும் திரையை அப்புறப்படுத்துவீராக. ........................ உடைய கவனத்தைப் பெற்றுக் கொள்ள எது தேவையோ அதைச் செய்வீராக.

**6. பிசாசின் அரண்களை நிர்மூலமாக்கும் அதிகாரம் உங்களுக்கு உண்டென்று அறியுங்கள்:**

“எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது” *2 கொரி.10:4*

**ஜெபம்:** ஆண்டவரே, நான் உம்முடைய வல்லமையுள்ள நாமத்தினால் ஜெபிக்கிறேன். சாத்தானுடைய கிரியைகளை .................... உடைய வாழ்கையில் அழித்துப் போடுவீராக.

**7. தேவனிடம் நல்ல நிலத்திற்காகக் கேளுங்கள்:**

“நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான்” *மத்.13:23.*

**ஜெபம்:** பிதாவே, சுவிசேஷம் நல்ல நிலமாகிய .............ன் இருதயத்தில் விழுந்து, ............. வேத வார்த்தைகளை கேட்டு மனதிலாக்கி புரிந்து கொள்ள உதவி செய்யும்.

**8. தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுங்கள்:**

“நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்” *1 கொரி.3:6-7.*

**ஜெபம்:** பிதாவே, உமது திட்டங்களும் நோக்கங்களும் நிறைவேற ...............காக ஜெபிக்கும் போது என் சுயத்தின்படியல்லாமல் உமது சித்தபடி ஜெபிக்க போதியும்.

**9. சத்துருவுக்கு எதிராக தேவனுடைய வெற்றிக்காக அவரைத் துதியுங்கள்:**

“தேவனே நீர் என் ராஜா, யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும். உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே விழத்தாக்கி, எங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம். என் வில்லை நான் நம்பேன்; என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை; நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சித்து எங்களைப் பகைக்கிறவர்களை வெட்கப்படுத்துகிறீர். தேவனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுவோம்; உமது நாமத்தை என்றென்றைக்கும் துதிப்போம்” *சங்.44:4-8*

**ஜெபம்:** பிதாவே நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் நீர் .......... உடைய வாழ்வில் வெற்றி தருவீர்.

# இயேசுவை நோக்கக்கடவோம்

***Looking unto Jesus***

Theodore Monod (1802-1856)

“விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமான இயேசுவை நோக்கி .....” *எபி.12:2.*

**1. வேதவாக்கியங்களில்:**

அவர் யார், அவர் என்ன செய்திருக்கிறார், என்ன தருகிறார், என்ன வாஞ்சிக்கிறார் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வோம். அவரில் நமது மாதிரியைக் காண்போம், அவரது போதனைகளில் போதிக்கப்படுவோம், அவரது கண்ணோட்டம் நமது சட்டமாயிருக்கட்டும், அவரது வாக்குத்தத்தங்கள் நமக்கு ஆதரவாயிருக்கட்டும்; அவரது நபரத்துவத்திலும் பணியிலும் நமது ஆத்துமாக்களின் தேவைகளுக்கான சகல திருப்தியையும் பெற்றுக் கொள்வோம்.

**2. உயிரோடெழுந்தவரில்:**

அவரது நீதி மட்டுமே நம்மை நீதிமான்களாக்க முடியும். நாம் எவ்வளவு தகுதியற்றவர்களாயிருந்தாலும் அவரிடத்தில் கிட்டிச் சேரவும் அவருடைய நாமத்தில் அவரிடத்தில் சேரவும் அவரை நோக்கிப் பார்ப்போம்.

**3. மகிமைப்படுத்தப்பட்டவர்:**

அவரை நமது ஒரே பரம பரிந்து பேசுகிறவராய்க் (1 யோவா.2:1) கண்டு கொள்வோம். நம்முடைய இரட்சிப்புக்காக அவரது அன்பால் தூண்டப்பட்டு மன்றாட்டைப் பூரணப்படுத்துகிறவரை நோக்கிப் பார்ப்போம்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

**4. தூய ஆவியானவரால் வெளிப் படுத்தப் பட்டவர்:**

தொடர்ந்து அவரோடுள்ள உறவால் பாவக்கறைப்பட்ட இருதயங்கள் கழுகப்படவும், அந்தகார ஆவிகள் பிரகாசமடையவும், முரட்டாட்டமான சித்தங்கள் மறுருபமடையவும், உலகத்தாலும் தீயோனாலும் வரும் தாக்குதல்களின் மேல் வெற்றி பெறவும் இயேசுவாகிய ஞானத்தால் தந்திரங்களை மேற்கொள்ளவும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டு நம்மேல் மனதுருக்கமுள்ளவருமான இயேசுவை நோக்கிப் பார்ப்போம்.

**5. மனந்திரும்புதலைத் தருகிறவர்:**

மனந்திரும்புதலையும் அதோடு பாவ மன்னிப்பையும் (அப்.5:31) தருகிறவர். நமது மீறுதல்களை அறிந்து கொள்ளவும் அறிக்கை பண்ணவும் விட்டுவிடவும் கிருபை தருகிற அவரை நோக்கிப் பார்ப்போம்.

**6. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய பணியும், சிலுவையும் அளிப்பவர்:**

அதோடு அதை சுமப்பதற்கான கிருபை, பொறுமை, சுறுசுறுப்பு ஆகியவற்றை அளிப்பவரை நோக்கிப் பாருங்கள். நமது பலவீனங்களில் தமது பெலனை அளிப்பவரை நோக்கிப் பாருங்கள்.

**7. பிதாவின் வீட்டிற்குத் திரும்பிச் சென்றவர்:**

அவர் இப்போது நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணப் போயிருக்கிறார். அவர் கடைசிச் சத்துருவாகிய மரணத்தை பரிகரிக்க வரும் போது வெற்றி பெற்று சேர்ந்து மகிழ்வாக வாழுவோம். அந்த இயேசுவை நோக்கிப் பார்ப்போம்.

**8. நிச்சயமாகத் திரும்பவும் வரப் போகிறவர்:**

விசுவாசமுள்ள சபை காலா காலமாக பொறுமையோடும் நம்பிக்கையோடும் விழிப்புடனும் மகிழ்வுடனும் அவர் அருகில் வந்துவிட்டார் என்ற தைரியத்துடனிருக்கிறது. (பிலி.4:4-5, 1 தெச.5:23)

**9. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும்:**

அவரே மாதிரியும் ஆதாரமும், நோக்கமும், விசுவாசிகளின் வரிசையில் முதலும் கடைசியுமாயிருக்கிறார். அவரால் விசுவாசம் தூண்டப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. நாம் விசுவாசத்தில் மென்மேலும் வளரச் செய்கிறார்.

**10. நம்மையல்ல அவரையே:**

நமது எண்ணங்கள் கேள்விகள், மனோபாவனைகள், சார்புகள், திட்டங்கள், விருப்பங்கள் யாவும் அவரைக் குறித்தேயிருக்க வேண்டும்.

**11. தடைகளை நோக்க வேண்டாம்:**

நமது பாதையில் வரும் தடைகளை நோக்க வேண்டாம். அவற்றைக் குறித்து நாம் சிந்திக்கத் தொடங்கினால் அவை நம்மைத் திகைக்கவும், குழப்பமடையவும் செய்யும். ஏனெனில் அவை ஏன் அனுமதிக்கப் பட்டன, எப்படி அவற்றை மேற் கொள்வது என்பவற்றை நாம் அறிந்து கொள்ளக் கூடாதவர்கள். தண்ணீர் மேல் நடந்த பேதுரு இயேசுவை நோக்கிய போது பாறை மேல் நடப்பது போல் நடந்தான். ஆனால் புயலினால் ஏற்பட்ட அலைகளை நோக்கிய போது அமிழத் தொடங்கினான். நமது பணி எவ்வளவு கடினமோ அவ்வளவு சோதனைகளும் கடினமாயிருக்கும். அதற்கேற்றபடி இயேசுவை நோக்க வேண்டும்.

**12. நமது விருப்பங்களின் உத்தமத்திலல்ல, நமது தீர்மானங்களின் பலத்தோடு இயேசுவை நோக்க வேண்டும்:**

பலவேளைகளில் விசேஷித்த நமது விருப்பங்கள் வீழ்ச்சிக்கு ஏதுவாகிவிடுகின்றன. அவரது அன்பையும் வாக்கையும் சார்ந்து கொண்டு அவரையே நோக்க வேண்டும்.

**13. நமது பலத்தையல்ல:**

நமது பலம் நம்மை மட்டுமே மகிமைப்படுத்தும். தேவனை மகிமைப்படுத்த தேவ பெலன் வேண்டும்.

**14. நமது பெலவீனங்களைப் பார்க்கக் கூடாது:**

நமது பலவீனங்களைக் குறித்து புலம்புவதால் நாம் பெலனடைய முடியாது. இயேசுவை நோக்கி அவரது பெலனைப் பெறுவோம். அது நம் இருதயங்களை நிரப்பி, நம் உதடுகளால் அவரைத் துதிக்கச் செய்யும்.

**15. நமது பாவங்களைப் பார்க்கக் கூடாது:**

நாம் நம்முடைய நிலைமையை உணர்ந்து கொள்ளும் போது அவர் நமக்கு எவ்வளவாய் தேவைபடுகிறார் என்பதை உணர்ந்து இயேசுவை நோக்குவோம். நம்மில் பாவமில்லை என்ற நினைவு கூடாது. நம்முடைய பாவத்தை காட்டிலும் அவரது தியாகம் பெரிதாகவும் மன்னிக்க அவரது கிருபை பெரிதாகவுமிருக்கிறது.

**16. நாம் அவருக்காக எதைச் செய்கிறோம் என்று பார்க்க வேண்டாம்:**

வேலைப் பளுவால் நமது இரட்சகரை மறந்து விடுவதுண்டு. கை நிறைந்ததும் இருதயம் வெறுமையாயிருக்கிறது. நமது இருதயம் அவரது அன்பால் நிறைந்திருந்தால் அவரது சேவையில் கைகள் விறுவிறுப்புடன் செயல்படும்.

**17. நமது தோல்விகளையும் வெற்றிகளையும் பார்க்கக் கூடாது:**

நமது வெற்றிகளை நோக்கினால் பெருமையும், தோல்விகளை நோக்கினால் சோர்பும் ஏற்படும். நல்ல போராட்டம் போராட இவை இரண்டுமே தகாது. (1 தீமோ.6:12) எல்லா ஆசீர்வாதங்களைப் போல விசுவாசத்தால் பெற்றுக் கொண்ட வெற்றியும் இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் தருகின்ற ஈவு (1 கொரி.15:57) அவருக்கே மகிமையுண்டாகட்டும்.

**18. நமது சந்தேகங்களை நோக்க வேண்டாம்:**

சந்தேகங்களை நாம் நோக்கும் தோறும் அவைப் பெரிதாகி நமது விசுவாசம், பெலன், மகிழ்ச்சி யாவற்றையும் விழுங்கி விடலாம். எனவே சத்தியமாகிய இயேசுவை நோக்குவோம் யோவா.14:6. அவரது பிரசன்னத்தால் சந்தேகங்கள் சூரியனைக் கண்ட பனி போல மறைந்து விடும்.

**19. இயேசுவையே எப்போதும் உறுதியுடன் நோக்குவோம்:**

அவரை அதிக உறுதியுடன் நோக்க நோக்க அவருடைய சாயலில் மகிமையின் மேல் மகிமையடைவோம் 2கொரி.3:18. அப்போது இப்பூமியிலிருந்து பரத்துக்கு அழைக்கப்படும் நேரத்துக்காகக் காத்திருப்போம். “அவர் வெளிப்படும் பொழுது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்” 1 யோவா. 3:2.

**நம்முடைய பாவத்தை காட்டிலும் அவரது தியாகம் பெரிதாகவும், மன்னிக்க அவரது கிருபை பெரிதாகவுமிருக்கிறது.**

# தேவனுடைய வல்லமையை நம்புவதற்கான காரணங்கள்

***Reasons for trusting God's Power***

William Gurnad (1617-1679)

“.......கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்” எபேசி.6:10.

அவருடைய சத்துவத்தின் வல்லமை என்ன? அவரது “பலத்த சத்துவம்” அவரை பெலனும் வல்லமையுமுள்ளவர் என்றும் சர்வ வல்லவர் என்றும் பலவாறாக விவரிக்க ஏதுவாகிறது. அவரது அளவு கடந்த சர்வ வல்லமை முக்கியம் வாய்ந்தது.

கர்த்தருடைய சத்துவத்தில் பலப்பட விசுவாசத்தின் இரு செயல்கள் தேவை. முதலாவது அவர் தமது வல்லமையில் சர்வ வல்லவர் என்ற உறுதி வேண்டும். இது அடிப்படையான சத்தியம். இரண்டாவதாக விசுவாசிப்பது மட்டுமல்ல அந்த வல்லமை உங்கள் பாதுகாவலுக்கும் உரியது என விசுவாசிக்க வேண்டும். நாம் அனைத்து சோதனைகளையும் அவரது புயத்தில் சார்ந்து சந்திக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

ஒரு தந்தை கரடு முரடான பாதையில் செல்லும் போது தனது கரத்தால் தனது பிள்ளையை அரவணைத்துக் கொள்வது போல தமது வல்லமையைத் தமது பிள்ளைகள் விசுவாச கரங்களால் பிடித்துக் கொள்ள அவர் விரும்புகிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனேக பக்தர்களை இவ்வாறு அவர் சோதித்திருக்கிறார்.

யாத்.6:3-ன்படி அவரது வல்லமை வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் தங்கள் கால்களை உறுதியாக வைத்தனர். அவர்கள் நன்றாக வாழ்ந்து வெற்றியுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

மரித்து தங்கள் பிள்ளைகளுக்காக வாக்குத்தத்தங்களையும் சுதந்தரித்துக் கொண்டனர். அவர்கள் ஒரு போதும் வாக்குத்தத்தங்களை சந்தேகிக்கவில்லை.

### கடந்த கால செயல்கள்

கடந்த காலங்களிலெல்லாம் அவரது வல்லமை போதுமானதாயிருந்தாலும் அதை விசுவாசிப்பது கூடாததாயிருக்கிறது. மோசேயின் விசுவாசம் அவனது சந்தேகங்களை மேற்கொண்டு பிரகாசிக்கிறது. அவன் தேவனிடம், "என்னோடிருக்கிற காலாட்கள் ஆறு லட்சம் பேர், ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே, ஆடு மாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? என்றான்" எண்.11:21,22.

இந்தப் பரிசுத்தவான் தேவனுடைய சர்வ வல்லமையை மறந்து கேள்வி கேட்டான். இன்னொரு விதமாகக் கூறினால் "உமது வல்லமையை நீர் அதிகமாகக் கணக்குப் போடுகிறீர். நீர் வாக்குப் பண்ணினது நடவாது." ஆனால் தேவன் அதனைத் தடுத்துக் கூறுவதைப் பாருங்கள்: "..... கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ....." வச.23.

மரியாளுடைய விஷயத்திலும் இதுவே தான். அவள் "ஆண்டவரே நீர் இங்கே இருந்திரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான்." மார்த்தாளும் ".....இப்போது நாலு நாளாயிற்றே நாறுமே...." யோவா.11:32,39 என்றாள். இரண்டு பேரும் தேவ பிள்ளைகள் தான். ஆயினும் கிறிஸ்துவின் வல்லமையினைக் குறித்து சந்தேகித்தனர். மரியாள் அவரது வல்லமையை இடத்தோடு தொடர்பு படுத்தினாள். "நீர் இங்கே இருந்தீரானால்;" மார்த்தாள் அவரது வல்லமையை சமயத்தோடு தொடர்பு படுத்தினாள், "நாலு நாளாயிற்றே......". ஆனாலும் அவர்களுடைய அவிசுவாசத்தைத் தாண்டி தேவன் தாம் வல்லமையுள்ளவர் என்பதை நிரூபித்தார்.

### அவரது நித்திய வாஞ்சை

பிதாவினுடைய சித்தம் நாம் எப்போதும் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டுமென்பதாகும். அவர் சர்வ வல்லவர் என்று அழைக்கப்படவும் நமது முழு நம்பிக்கையையும் அவர் மீது வைக்கவும் எதிர்பார்க்கிறார். மனிதன் ஞானவான் என்று அழைக்கப்படலாம். ஆனால் தேவன் மட்டுமே சகல ஞானமும், சகல இரக்கமும், சர்வ வல்லமையுமுடையவர், எல்லாவற்றிலும் அவர் மேலானவர் என்பதை நாம் மறக்கும் போது அவரை ஒரு சிருஷ்டியாக்கிவிடுவதால் நமது ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை.

இந்த விசுவாசத்தில் தடுமாறும் போது சில வேளைகளில் தேவன் தமது அருமையான பிள்ளைகளைத் தண்டிக்கவும் நேரிடுகிறது. நாம் தர்க்கம் செய்யாது, அவரது வாக்குகளைப் பற்றிக் கொண்டு அவரது வல்லமை நம்மில் ஊற்றப்படும் படியாக நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

சகரியா தூதனிடம், ".....இதை நான் எதினால் அறிவேன்? நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் கிழவியாயிருக்கிறாளே" என்றான் லூக்.1:18. இவ்வாறு துணிந்து அவருடைய வல்லமைக்கு எதிராகக் கேள்வி கேட்ட போது அவன் ஊமையானான். நாம் தேவ வாக்கை தாக்கமின்றி விசுவாசிக்க வேண்டும். ஆபிரகாமின் விசுவாசம் பெரிது. "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப் படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" ரோமர்.4:21.

தேவன் நமது நம்பிக்கையை ஊக்குவிக்க சில பலத்த வழிகளில் குறுக்கிடுகிறார். ஒரு எதிர் விசையை எழும்பச் செய்து, சரியான நேரத்தில் மகிமையான ஞாபகஸ்தம்பத்தை ஏற்படுத்துகிறார். இவ்வாறு அவர் தலையிடும் போது எல்லாரும், "சர்வ வல்லமை இங்கு வெளிப்பட்டது" என்பார்கள்.

இவ்வாறுதான் தமது வல்லமையை மிகப் பெரிய அளவில் வெளிப்படுத்த லாசரு மரித்த பின் அங்கு சென்றார். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் யோசேப்பின் காலத்தில் வெளியேறியிருந்தால் எளிதாயிருந்திருக்கும். ஆனால் அகந்தை நிறைந்த பார்வோன் காலம் வரை அது நீட்டிக்கப்பட்டது. இஸ்ரவேல் மக்கள் பார்வோனால் கொடுமைப்படுத்தப் பட்டபடியால் தேவனுடைய வல்லமையின் கரம் அவர்களை விடுவித்ததை உணர்ந்து கொண்டார்கள்.

அவர் ஏற்ற வேளையிலே நமக்கு உதவி செய்து சோதனைகளிலும் வேதனைகளிலும் விடுவிப்பார். எகிப்துக்கு வெளியே கொண்டு வந்த அவர் இஸ்ரவேலரை செங்கடலையும் கடக்கப் பண்ணினார்."ஒருமனிதன் பிள்ளையைச் சுமந்து கொண்டு செல்லுகிறது போல .....கர்த்தர் உங்களைச் சுமந்து கொண்டு வந்ததைக் கண்டீர்களே" உபா.1:31.

"......இரட்சிப்புக்கு ஏதுவான விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறீர்கள்" 1 பேது.1:5. "நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்" யாத்.19:4.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

## எழுப்புதலுக்காக இதய கதறல்

### (7 மணி நேர உபவாச ஜெபம்)

| | | |
|---|---|---|
| இடம் | : | **ராஜபாளையம் சிற்றி A.G. சர்ச்**<br>PSK நகர், அழகிய நகர், சத்திரப்பட்டி ரோடு,<br>ராஜபாளையம் - 626 108 Mobile : **96006 11611** |
| நாள் | : | **10.06.2023,** 2-வது சனிக்கிழமை |
| நேரம் | : | காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை |
| செய்தி | : | சகோதரன் **வெஸ்லி தேவதாசன்** |
| ஜெபம் | : | **NIMS மிஷனெரிகள்,** குஜராத்<br>**IEM மிஷனெரிகள்,** தமிழ்நாடு |
| தொடர்பு | : | **வருகையின் தூதன்,** மொபைல் : 95432 21008 |

### Contact:

**VARUKAYIN THOOTHAN**
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
**SOUTH INDIA.**

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

### சிந்தனைக்கு

ஜெபத்தின் வல்லமை, அதைக் கேட்கும் தேவன் மேலுள்ள விசுவாசத்தை சார்ந்தது. இந்த விசுவாசம் ஜெபிப்பதற்கான தைரியத்தையும், தேவனோடு போராடி மேற்கொள்ள வலிமையையும் தருகிறது.

ஜெபக்குறைவுக்கான மிகப் பெரிய ஒரு காரணம் ஜீவனும் மகிழ்ச்சியும் நிறைந்த உறுதி நம்மில் குறைவுபடுகிறது தான்.

தேவன் எனக்குச் செவி கொடுப்பார் என்று ஒருவர் விசுவாசத்துடன் கூறினால் அவர் ஜெபிக்க எந்தத் தடையும் வர முடியாது.

ஒன்றுமில்லாய்மையிலும், உதவியற்ற நிலையிலும் நீங்கள் ஏழைப் பாவியாகவும், பலவீனத்திலும், தகுதியின்மையிலும் ஒரு பரிசுத்தவானைப் போல அவரிடம் வரலாம்.

தேவன் அளவிலடங்காதவரும், நாம் பெற்றுக் கொள்வதை விட அளிப்பதற்கு விருப்பமுள்ளவராயிருந்தால் ஏன் கெஞ்ச வேண்டும்? போராட வேண்டும்!

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*